செ.வெ.எண்:352 நாள்: 15/06/2011

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 15.6.2011

திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம், சேர்வலார், மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களிலிருந்து கோடகன் வாய்க்கால் பாசன அமைப்பின் கீழ் உள்ள பாசன நிலங்களில் கார் சாகுபடிக்காக தண்ணீர் திறந்துவிடக் கோரி, திருநெல்வேலி மாவட்ட வேளாண் பெருங்குடிமக்களிடமிருந்து எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருங்குடிமக்களின் வேண்டுகோளினை ஏற்று, பாபநாசம், சேர்வலார், மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களிலிருந்து கோடகன் வாய்க்கால் பாசன அமைப்பின் கீழுள்ள பாசன நிலங்களில் கார் சாகுபடிக்காக 19.6.2011 முதல் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி மற்றும் அம்பாசமுத்திரம் வட்டங்களில், கோடகன் வாய்க்கால் பாசன அமைப்பின் கீழ் உள்ள 1,207 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9